**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. 152/2016 |
| Deposition of witness | | PW- 1 /LW- 1 |
| Name | | திரு. ரெங்கராஜ் |
| Father's/Husband Name | | திரு. நடராஜன் |
| Village | | நெய்வேலி, வடபாதி |
| Taluk | | திருவோணம் |
| Age | | 45/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 25th day of July 2025**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**
**(சாட்சியை நீதிமன்ற இரண்டாம் நிலை காவலர் 1375 திரு.மனோபாரதி என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் திருவோணம் தாலுக்கா நெய்வேலி வடபாதி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கறம்பகுடியில் நகை கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். அவ்வபோது வெளிநாடு சென்று வருவேன். ஆஜர் எதிரிகளை தெரியும், எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். எதிரி சரவணனையும் தெரியும், ஒரே தெருக்காரர். இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பாக எங்கள் வீட்டுற்கு எதிரே உள்ள அரசு ஆரம்ப பள்ளிக்கு அருகில் புளியமரம் ஒன்று கீழே விழும் நிலையில் இருந்தது. அதை அகற்றுவதற்காக பஞ்சாயத்து தலைவர் மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் ஆகிய இடங்களில் மனு கொடுத்தேன். அதன் அடிப்படையில் மரம் அந்த இடத்திலிருந்து அகற்றப்பட்டு விட்டது. எதிரிகள் அந்த மரத்தை அகற்றுவதை எடுக்க கூடாது என பிரச்சனை செய்தனர். இந்த பிரச்சனையிலிருந்து எங்களுக்குள் முன்விரோதம் இருந்து வருகிறது. கடந்த 20.09.2015 ந் தேதி சம்பவ தினத்தன்று காலை 10.00 மணியளவில் அரசு பள்ளி எதிரே விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்திற்காக வெடி வெடித்தார்கள்.

என் தம்பி பாலமுருகன் இந்த இடத்தில் வெடிக்க வேண்டாம் கொஞ்சம் தள்ளிபோய் வெடிக்க சொன்னார். எதிரிகள் சுதாகர் மற்றும் செல்லதுரை இங்கு தான் வெடிப்போம் உன்னால் ஆனதை பார்த்துக்கொள் என்று சொன்னார். அந்த பிரச்சனை அங்கேயே முடிந்து விநாயகரை ஆற்றில் கரைத்துவிட்டு வந்துவிட்டனர். பின்பு நான் வீட்டிற்கு சாப்பிட மதியம் 2.30 மணியளவில் வந்தபோது சுதாகர் வீட்டில் கூட்டமாக நின்றார்கள். நான் வண்டியை நிறுத்தி என்வென்று விசாரித்தேன். எதிரி செல்லதுரை என்னை பார்த்து தேவடியா மகன் வந்துவிட்டான் அவனை அடிங்கடா என்று இரும்பு கம்பியால் என்னை அடிக்க வந்தார் நான் எனது வலது கையால் தடுத்தேன். அதில் எனக்கு காயம் ஏற்பட்டது. தொடர்ந்து சுதாகர் என்னை புண்டாமகனே என்று அசிங்கமாக திட்டி இரும்பு பைப்பால் முதுகில் அடித்தார். அதை தொடர்ந்து சரவணன் ஊர்வலத்தில் பயன்படுத்திய ரீப்பர் கம்பை எடுத்து குச்சிகாரி மகனே என்று அசிங்கமாக திட்டி முதுகில் அடித்தார். தேவேந்திரன் டியூப் லைட்டை எடுத்துக்கொண்டு வந்து தேவடியா, குச்சிகாரி மகவனே என்று அசிங்கமாக திட்டி என் வலது பக்க கண்ணத்தில் அடித்தார்.

அவர்கள் விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் பின்பு ஊர்காரர்கள் சண்டையை விலக்கிவிட்டார்கள். எதிரிகள் செல்லும்போது கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி விட்டு சென்றார்கள். என் சத்தம் கேட்டு என் அப்பா, என் தம்பிகள் பாலமுருகன் மற்றும் திருமுருகன் ஓடிவந்தார்கள். சத்தம் கேட்டு வந்ததால் அவர்களுக்கும் இந்த சம்பவம் தெரியும். என்னை என் அப்பா பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்து மூன்று நாட்கள் அங்கு சிகிச்சை பெற்றேன். மேல்சிகிச்சைக்காக பட்டுக்கோட்டை ஆர்தோ கேர் மருத்துவமனையில் கையில் ஆப்ரேஷன் செய்து பிளேட் வைத்து 5 நாட்கள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்றேன். மருத்துவமனையில் போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான், அதிலுள்ள கைரேகை என்னுடையது தான். எனக்கு வலது கையில் அடிப்பட்டு இருந்ததால் நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதி என்னிடம் படித்துக்காட்டினார்கள். அதில் நான் கைரேகை வைத்தேன். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும்.

பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் இருந்தபோது புகார் வாக்குமூலம் கொடுத்தேன். அதன்பிறகு மூன்று முறை என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் 20 ந் தேதி அல்லது 21 ந் தேதியில் நடைப்பெற்றதா என்றால் 20 ந் தேதி நடைப்பெற்றது. எந்த மாதம் எத்தனை மணிக்கு சம்பவம் நடந்தது என்றால் 20.09.2015 ந் தேதி மதியம் 2.30 மணிக்கு நடைபெற்றது. விநாயகர் ஊர்வலம் 20ந் தேதி நடக்கவில்லை 21 ந் தேதிதான் நடைப்பெற்றது என்றாலும் எதிரிகள் தங்களுக்கும் இந்த சம்பவத்திற்கும் தொடர்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் சம்பவம் 21.09.2015 ந் தேதி காலை சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நகைக்டைக்கு நான் எத்தனை மணிக்கு கிளம்புவேன் மற்றும் கடையை திறந்து பின்பு எப்போது சாப்பிட வருவேன் என்றால் காலை 9 மணிக்கு கிளம்பி மதியம் 2.30 மணியளவில் சாப்பிட வருவேன். என்னுடைய 161(3) மற்றும் புகார்வாக்குமூலத்தில் என்னுடைய கடை எங்கு உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் கறம்பக்குடியில் நகைக்கடை வைத்துள்ளேன். நான் 161(3) மற்றும் புகார்வாக்குமூலத்தில் என்னுடைய கடை கறம்பகுடியில் உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் 161(3) மற்றும் புகார்வாக்குமூலத்தில் என்னுடைய கடை எங்கு உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக தற்போது பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

என்னுடைய 161(3) மற்றும் புகார்வாக்குமூலத்தில் எங்களுக்குள் முன்விரோதம் உள்ளது என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

விநாயகர் ஊர்வலம் 2015 க்கு முன்னாடி யார் தலைமையில் நடைப்பெற்றது என்றால் நான் 2013 க்கு முன்னாடி ஊர் தலைவராக இருந்தபோது நான் நடத்திக்கொண்டு இருந்தேன். 2013 க்கு பிறகு யாரை தலைவராக தேர்ந்தெடுத்தீர்கள் என்றால் வழக்கின் எதிரி சுதாகரை 2014 க்கு பிறகு தலைவராக தேர்ந்தெடுத்தோம். தற்போது யார் தலைவராக உள்ளார்கள் என்றால் சம்பவத்திற்கு பிறகு ஊர்வலம் நடத்துவதை விட்டுவிட்டோம். புளியமரம் வெட்டுவதற்கு மனு கொடுத்தது தொடர்பாக 161(3) மற்றும் புகார்வாக்குமூலத்தில்

சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. கறம்பகுடிக்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 4 to 5 கி.மீ. நான் எத்தனை மணிக்கு கடையை பூட்டி விட்டு வீட்டிற்கு சாப்பிட வந்தேன் என்றால் சுமார் 2.10 மணியளவில் கடையை பூட்டி விட்டு சாப்பிட வருவேன். எவ்வளவு நேரத்தில் என் பைக்கில் வீட்டிற்கு வரமுடியும் என்றால் சுமார் 20 நிமிடம். தோராயமாக 5 கி.மீட்டரை சுமார் 5 நிமிடத்தில் வரலாம் என்று சொன்னால் முடியாது. என்னை எந்தவிதமான இரும்பு பைப்பால் அடித்தார்கள் என்றால் தண்ணிபைப் மாதிரி இருக்கும். எவ்வளவு நீளம் மற்றும் அகலம் என்றால் நீளம் சுமார் 4 அடியும், அகலம் சுமார் 4 இன்ச் இருக்கும். பைப்பை நான் நேரடியாக பார்த்தேன். A1 அடித்த பைப்பை போலிசார் கைபற்றினார்களா என்றால் எனக்கு தெரியாது.

A2 அடித்த பைப் எவ்வாறு இருந்தது என்றால் இரண்டு பைப்பும் ஒரே மாதிரிதான் இருந்தது. A3 அடித்ததாக சொல்லும் ரீப்பர் எவ்வளவு நீளம் இருக்கும் என்றால் சுமார் 4 to 5 அடி இருக்கும். ரீப்பர் உடைந்து சீராய்ப்பாக இருந்ததா என்றால் எனக்கு தெரியாது. புளிய மரம் தொடர்பான முன்விரோத காரணத்தால் எதிரிகள் மீது என்னை அசிங்கமாக திட்டியதாக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னை யாரும் தாக்கவும் இல்லை வழக்கு சம்பவம் நடக்கவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கறம்பகுடியிலிருந்து வீட்டிற்கு வரும்போது பைக்கிலிருந்து கீழே விழுந்துவிட்டு அதனால் ஏற்பட்ட காயத்தை வைத்து புளியமரம் தொடர்பான முன்விரோதத்தில் எதிரிகள் மீது புகார் கொடுத்து அவர்களை வழக்கில் சிக்க வைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் சம்பவ இடத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கம் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- திரு.த.சுதர்சன்.,எம்.ஏ.,எல்.எல்.பி.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை